In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

S.C.No. 78/2023 | Prosecution witness P.W.7

Name: Dr.Aswathrajan | Calling:

Father Name: | Religion:

Village: | Caste:

Taluk: | Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 02.03.2026.

**(Accused 1 and 2 present.)**

முதல் விசாரணை :–

நான் தற்போது ஆயக்குடி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு நிலக்கோட்டை அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியிலிருந்தபோது அன்று ஒருநாள் பொறுப்பு மருத்துவராக வத்தலக்குண்டு அரசு மருத்துவமனையில் பணியிலிருந்தபோது கடந்த 26.06.2022ம் தேதி இரவு 7.45 மணிக்கு ராஜலட்சுமி க/பெ சின்னையா 34 வயதுடைய பெண் அன்றைய தினம் மதியம் 3 மணிக்கு வத்தலக்குண்டு அருகில் உள்ள வத்தலப்பட்டி அருகே தன்னை ஒரு நபர் அடித்துவிட்டதாக கூறினார். அவருக்கு பரிசோதனை செய்ததில் வெளிக்காயம் எதுவும் இல்லை. அப்பெண் என்னிடம் இடது தோள்பட்டையில் தாக்கியதாகவும், வலி இருப்பதாகவும் அதனால் இடது தோள்பட்டை தூக்க முடியவில்லை எனவும் கூறினார். அவரை பரிசோதனை செய்தபோது இடது தோள்பட்டையில் சிறிதளவு வீக்கம் இருந்தது மற்றும் வலி இருந்தது, அசைவதில் சிரமம் இருந்தது. அதனால் அவரை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு நுண்கதிர்படம் எடுக்க அனுப்பிவைத்தேன். திண்டுக்கல் அரசு மருத்துவனையில் வெளிநோயாளியாக மட்டுமே சிகிச்சை பெற்றுள்ளார். எனவே அவருக்கு ஏற்பட்டுள்ள காயம் சாதாரண காயம் என கருத்து தெரிவித்து காயச்சான்று வழங்கினேன். அக்காயச் சான்றிதழ் **அதசாஆ.3** என்னை

ஆய்வாளர்விசாரணை செய்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–

ஒரு வாகனத்தில் பயணம் செய்யும்போது அந்த வாகனம் வேகமாக சென்று பிரேக் செய்யும்போது இதுபோன்ற காயம் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். சிறப்பு சார்பு ஆய்வாளர் பழனிச்சாமி என்பவரை நான் பரிசோதித்து வழங்கிய விபத்து பதிவேடு என்னிடம் காண்பிக்கப்படுவதாகும். அந்த விபத்து பதிவேடு எதசாஆ.1. அதில் மேற்படி பழனிச்சாமி, சிறப்பு சார்பு ஆய்வாளர் 26.06.2022ம் தேதி என்னிடம் மாலை 4.30 மணிக்கு வந்தபோது நான் பரிசோதித்ததில் அவர் குடிபோதையில் இருந்துள்ளார் சான்று வழங்கியுள்ளேன்.

மறு விசாரணை – இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.03.02 16:26:58 +0530

Principal District Judge,
Dindigul.